[திரு. எம். அண்ணாமலை] [1979 மார்ச் 6

பேசினார்கள். அந்த ஆசிரியர்களுடைய பிற கோரிக்கைககள் சம்பந்தமாக என்ன பரிசீலனை செய்யப்பட்டது என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு கல்வி நிறுவனத்தை அரசு ஏற்றுக்கொள்வது என்பது பல் வேறு விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டது. இப் பொழுது நம் முன்னால் உள்ள பிரச்னை ஆசிரியர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதற்கு, இருக்கிற அதிகார வரம்பிற்குள் இந்த அரசு ஏதேனும் செய்கிறதா என்பதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிய விரும்புகிறார்கள் என்று கருதுகிறேன் அந்த அடிப்படையில் இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் பாதிக்கப்படாத வகையில் எல்லா நடவடிக்கை களையும் அரசு எடுத்திருக்கிறது.

(6) அரசினர் தீர்மானம்.

விதி 41(3) ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41 (3) இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள் களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக் கூடாது என்ற விதி யைத் தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

(5) கவன ஈர்ப்புகள்— தொடர்ச்சி.

(இ) உதகமண்டலம் மேட்டுப்பாளையம் பாதையில் நடைபெறும் நிவாரணப் பணிகள் குறித்து.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி எண். 41 ன் கீழ் கீழ்க்கண்டபொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்பு கிறேன்.

1979 மார்ச் 6] [திரு. கே. உச்சி]

'' நீலகிரி மாவட்டம், உதகமண்டலம்—மேட்டுப்பாளையம் பாதையில் நிவாரணப் பணிகள் நடைபெறுவதால் கீழ் நோக்கி வரும் வாகனங்கள் கோத்தகிரியைச் சுற்றி வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதனால் பஸ் பிரயாண நேரம் கூடுதலாக்கப்பட்டுள்ளதாலும், பஸ் கட்டணம் அதிகப்பட்டிருப்பதாலும், மைனலை, மடித்தொரை, கட்டபெட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் உதகை செல்ல முடியாததாலும், பர்லியர், அதற்கு மேலே உள்ள பகுதியைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் கூனூரிலிருந்து தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பிவர முடியாமலும் இருப்பதால் ஏற்பட்டிருக்கும் பதட்ட நிலை குறித்து .''

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்திலுள்ள சாலைகள் நிலச்சரிவினாலும், பெரும் சூறாவெளிக்காற்று மழையினாலும் பாதிக்கப்பட்டன. சாலைகளிலுள்ள பாலங்கள், மற்றும் தடுப்புச் சுவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுப் போக்குவரத்துக்கே தகுதியற்றதாக ஆகி விட்டன. மேலும் சாலைகளின் மேல்தளம், இடைவிடாது பெய்த மழையினால் அரிக்கப்பட்டதுடன் அநேக இடங்களில் குழிகள் (Pot holes) ஏற்பட்டன. எனவே, பாதிக்கப்பட்ட சாலைகளை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கும், சிறிய பாலங்கள், தடுப்புச் சுவர்கள் கட்டுவதற்கும் கருங்கற்கள், ஆங்காங்கே உடைக்கப்பட்டு சல்லிகள் சாலைகளின் ஓரங்களில் சேகரித்து அவ்வப்போதே அவைகளை உபயோகிக்க வேண்டும். மேட்டுப்பாளையம் குன்னூர், ஊட்டி, கோத்தகிரி மேட்டுப்பாளையம் குன்னூர், கோத்தகிரி சாலைகளில் மட்டும் 86 தடுப்புச் சுவர்களும், 112 சிறு பாலங்களும், 2 பெரிய பாலங்களும், 13 தார் சாலை போடும் வேலைகளும் ஆக 213 வேலைகள் 68 இலட்சம் ரூபாய் செலவில் எடுக்கப்பட்டு நடந்து வருகின்றன. தவிர சிறு பால வேலைகளை ஒவ்வொரு பாதியாக செய்துமுடிக்க வேண்டும். இவ்வாறு செய்கையில் போக்குவரத்துக்கு கூடிய மட்டும் இடைஞ்சல் நேராவண்ணமும், உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்படாவண்ணமும் இருப்பதற்குத் தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒருவழி போக்குவரத்து அனுமதிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான சில சிறு பால வேலைகள், தடுப்புச் சுவர்கள் மலைப்பாதையில் பெருவாரியாகச் செய்யும்பொழுது போக்குவரத்தை முழுவதும் நிறுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் மக்களுக்கு மிக்க இன்னல்கள் நேரும் என்பதால் ஒரு வழிப்போக்குவரத்துக்கு வகை செய்யப்பட்டது. கூடிய வரையில் தொழிலாளர்களுக்கு இடைஞ்சல் நேராவண்ணம் காலை வேளைகளிலும், மாலை வேளைகளிலும் குறிப்பிட்ட நேரங்களில் பேருந்துகள் இரு வழியும் குறிப்பிட்ட தொகுதிகளில் அனுமதிக்கப்படுகின்றன. மேலும் தொழிலாளர்களின் வசதிக்காக ரயில் பாதைகளும் செப்பனிடப்பட்டு ரயில் போக்குவரத்தும் துவக்கப்பட்டு அவர்கள்

தோட்டங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் சென்று திரும்ப வசதி செய்யப்பட்டு இருக்கிறது. இதுவரை நடைபெறாத அளவில் இவ்வளவு வேலைகள் குறுகிய காலத்தில் ஊட்டி சீசனுக்கு முன்னால் முடிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஒருவழி போக்குவரத்து ஏற்படுத்தா விட்டால் வேலைகள் தாமதமாவதுடன் வேலை செய்யும் ஆட்களுக்கும், பயணிகளுக்கும் விபத்துக்கள் அதிகம் ஏற்படவும் வாய்ப்புகள் உண்டு. இவை தவிர்க்கப்பட வேண்டியது மிக முக்கியமாகும்.

வேலைகள் யாவும் விரைந்து நடைபெற்று வருகின்றன. 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30-ந் தேதிக்குள் வேலைகள் யாவும் பூர்த்தியாகி இருவழிப்பாதை துவக்க இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. உச்சி : தலைவர் அவர்களே இதில் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக சொன்னார்கள். இந்தக் கட்டணத்தை குறைக்க அரசு ஆணை கொண்டு வருமா, இந்தக் கட்டணத்தை திடீர் என்று உயர்த்தியதன் காரணம் என்ன ? அதைக் குறைப்பதற்கு வழி செய்யப்படுமா ? மடித்தொரை, கட்டபெட்டு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தோட்ட தொழிலாளர்களும் மக்களும் உதகை செல்ல முடியவில்லை, பர்லியர் பகுதியில் உள்ளவர்கள் கூனூரிலிருந்து தங்கள் இருப்பிடத்திற்குச் சுற்றிக்கொண்டு ரொமல் இருப்பதற்கும் வழி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டண உயர்வு ஏற்பட்ட காரணத்தால் பயணிகளுக்கு ஏற்பட்ட இன்னல்களை குறித்து கூறினார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்று இன்றிலிருந்து கட்டணத்தை குறைத்து வழக்கம்போல் வசூலிக்கும் தொகையை வாங்கவேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்ன விஷயம் உண்மைக்கு மாறானது — இங்கு அமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் ரைஸ் பண்ணுகிறீர்கள் அதைப் புரிந்துக்காண்டேன் — இருங்கள் நான் பேசி முடித்து விடுகிறேன்.
..ெ.....

1979 மார்ச் 6]

திரு. எம். ஏ. லத்தீப் : நான் இந்த தீர்மானத்தைக் கொடுக்கவில்லை என்றாலும் கூட, தவறான, உண்மைக்கு புறம்பான விஷயங்களை அவை முன் வைக்கும்போது........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து அமர வேண்டும். அமைச்சர் பேசி முடித்த பின்னால், தவறான தகவல் தந்தார் என்று பிரிவிலேஜ் மோஷன் நீங்கள் கொடுக்கலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : நான் உரிமைப் பிரச்னை கொண்டு வருகிறேனோ இல்லையோ — நான் நினைத்ததை பேசி முடிப்பேன். I want to bring a matter to the notice of the House that the Minister has deliberately misled the House. I want to put the record straight.
நான் சொல்வது இரவு நேரங்களில் அப்படி அனுமதிக்கிறார்கள். நேற்றைக்கு நானும், திரு. உச்சி அவர்களும் வந்து கொண்டிருக்கிறோம், எங்களுக்கு வழியை விடவில்லை. நாங்கள் சட்ட மன்றத்திலே கலந்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னோம். அப்படியும் காக்கவைத்தார்கள். அதிலும் அதே வழியில் அமைச்சர் அவர்கள் போயிருக்கிறார். அமைச்சர் போயிருப்பதை சுட்டிக்காட்டி எங்களையும் விட வேண்டும் என்று கேட்டும் அரை மணி நேரம் காக்க வைத்தார்கள். எந்த வழியில் அமைச்சர் போனாரோ அந்த வழியில் சட்டமன்ற உறுப்பினர் வர முடியாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா என்ன ? நேற்றைக்கு அப்படி அரைமணி நேரம் அங்கே காக்க வைத்ததினால் நான் $12\frac{1}{2}$ மணிக்குத்தான் இங்கு வந்து சேர்ந்தேன். இரவு நேரத்தில் என்ன தடங்கல் அங்கே இருக்கிறது. அரங்கநாயகம் வரலாம். அப்துல் லத்தீப் அந்த வழியாக வரக்கூடாதா ?

[முற்பகல் 11–10]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, இரவு நேரங்களில் அங்கே வழி பேருந்துகளில் பயணம் செய்வதற்குவிடப் படுகின்றன என்ற தகவல் நான் கூறவில்லை. மலைப் பகுதியில் இருக்கும் சாலைகள் குறுகலான சாலைகளாக இருப்பதால் இருவழிப் போக்குவரத்து நடைமுறைக்குக் கொண்டு வந்தால் வேலைகள் தாமதமாவதுடன் வேலை செய்யும் ஆட்களுக்கும் பயணிகளுக்கும் விபத்துக்கள் அதிகம் ஏற்படவாய்ப்புகள் ஏற்படும் என்பதால் அந்த உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மாண்புமிகு உறுப்பினர் எந்த வழியாக வரும்போது தடுத்து நிறுத்தப்பட்டார் என்று விவரம் தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இரவு நேரங்களில் எந்த வழித் தடங்களிலும் அனுமதி அளிப்பது இல்லை என்று திரு. உச்சி அவர்கள் என்னிடத்தில்

நேற்று சொன்னார்கள். நான் உடனே அது குறித்து அதிகாரிகளோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் இங்கே வந்து திடீரென்று தகவல் கொடுத்துவிட்டு தவறான தகவல் என்று சொல்வது விரும்பத்தக்கது அல்ல. திரு. உச்சி அவர்கள் சொன்ன குறைபாட்டின் அடிப்படையில் அதைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இரவு நேரங்களில் வழித்தடங்களை அனுமதிப்பது குறித்து அதிகாரிகளோடு கலந்துபேசி முடிவு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்— தொடர்ச்சி.

(ஆ) சிம்கோ மீட்டர்ஸ் நிறுவன தொழில் தகராறு குறித்து.

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவர் அவர்களே, அடுத்த அலுவல்களுக்குப் போவதற்கு முன் நான் ஒரு சீரியஸ் அர்ஜன்ட் மேட்டர் உங்களின் கவனத்திற்கு சப்மிட் செய்கிறேன். உங்களுக்கு எம்பாரஸ்மென்ட் இருக்கலாம். அல்லது முன்னாலே இருக்கும் கனம் அமைச்சர்களுக்கு, அங்கத்தினர்களுக்கு இர்ரிடேட்டிங்காக இருக்கலாம். இர்ரிடேட்டிங், எம்பாரஸ்மென்ட் பார்த்துக் பிரயோசனம் இல்லை. நேற்று நான் சிம்கோ மீட்டர்ஸ் தொழிலாளர்கள் பற்றிச் சொல்கிறபோது சொன்னேன். பொது மக்களுக்கு எப்படி குண்டர்களால் ஆபத்து இருக்கிறது என்பதைப் பற்றிச் சொன்னேன். அது டிஸ்போஸ் ஆகிவிட்டது. இன்று போலீஸ் மூலம் அந்த இடத்தில் இந்த நிமிடத்தில் டேன்ஜர் ஏற்பட்டு இருக்கிறது. அங்கே கேட்டின் அருகே இருக்கும் தொழிலாளர்கள் மீது எந்த நேரத்திலும் லத்தி சார்ஜ் நடத்தலாம், எந்த நேரத்திலும் பைரிங் நடத்தலாம், அப்படிப்பட்ட சிட்சுவேஷன் அங்கே இருக்கிறது. நேற்று அந்தத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்வது என்று சொல்லி கேட்டிற்குச் சென்றார்கள். வேலை நிறுத்தம் செய்வது என்பது தொழிலாளர்களின் உரிமை. அவர்கள் உள்ளே போய் வேலை செய்யவில்லை என்றால் அது ஸ்டே இன் ஸ்ட்ரைக், வெளியே இருந்து வேலைக்கு போகவில்லை என்றால் அது ஸ்டே ஆப் ஸ்ட்ரைக். அந்த உரிமையில் தலையிட போலீசுக்கு உரிமை இல்லை. (மணியடிக்கப்பட்டது) நான் முன்பே சொன்னேன். உங்களுக்கு எம்பாரேசிங்காக இருக்கும் என்று, அங்கே ஒரு பைரிங் நடக்கும் சிட்சுவே'ஷனை வைத்துக்கொண்டு நான் இங்கே சும்மா உட்கார்ந்து கொண்டு இருக்க முடியாது. ஐ கான்னாட் டாலரேட்; ஆகவே, கிளியராகச் சொல்கிறேன்.........